## பாதுகாப்பு அமைச்சு

# விலைமனுக்கோரல்

### இராஜாங்க உளவுத்துறை சேவையின் முன் தயாரிக்கப்பட்ட கட்டிடத்திற்கான ZN AL (SANDWICH PANELS) கூட்டுத்தகடுகள் மற்றும் ZN AL வெளிபாடுகளை வழங்குதல்

### ஒப்பந்த இலக்கம் - MOD/ FD/PB/16/II-II/2021

1. பாதுகாப்பு அமைச்சு சார்பாக அமைச்சரவையின் கொள்முதல் குழுவின் தலைவரினால் **இராஜாங்க உளவுத்துறை சேவையின் (SIS) முன் தயாரிக்கப்பட்ட கட்டிடத்திற்கான ZN AL (SANDWICH PANELS) கூட்டுத்தகடுகள் மற்றும் ZN AL வெளிபாடுகளை** வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. **LKR 60 மில்லியன்** (VAT தவிர) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது

2. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி விதிமுறைக்கமைய இடம்பெறும்.

3. ஒப்பந்தத்திற்கான தகுதியினைபெறுவதற்கு மனுதாரர்கள் குற்றப்பத்திரிக்கையில் இடம்பெற்றிருக்க கூடாது. மற்றும் ZN AL (SANDWICH PANELS) கூட்டுத்தகடுகளை வழங்குவதற்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக காணப்படுவதுடன் மேலும் கடந்த பத்து (05) வருடங்களாக செயற்படும் நிறுவனமாக காணப்படல் வேண்டும். மனுதாரரினால் வழங்கப்படும் (SANDWICH PANELS) கூட்டுத்தகடுகளின் தனியுரிம உற்பத்தியாளராக காணப்படுதல் வேண்டும் அல்லது உள்ளூர் முகவர்களுக்கு தகடுகளை வழங்குவதற்கான அங்கீகாரத்தினை கொண்டிருத்தல்.

4. ஒப்பந்தங்களை வழங்குவதற்கான தகுதியினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான தகுதிகளாவன :

    a. சராசரியாக கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.200 மில்லியனுக்கு குறையாத மதிப்புள்ள (SANDWICH PANELS) கூட்டுத்தகடுகளை வழங்கியிருத்தல் வேண்டும்.

    b. குறைந்தபட்சம் செயற்திட்டமொன்றில் 5,000 சதுர அடிக்கு குறையாமல் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளின் (SANDWICH PANELS) கூட்டுத்தகடுகளை வழங்கியமைக்கான அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும். அதே திட்டத்தில் அல்லது இதே போன்ற பிற இயற்கை திட்டத்தில் டுமுசு 50 மில்லியனுக்கும் குறையாது மீட்டர் மதிப்பினை கொண்டிருத்தல் வேண்டும் இந்த திட்டமானது கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் முடிக்கப்பட்டிருத்தல் வேண்டும்

5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் இராஜாங்க உளவுத்துறை சேவையிலிருந்து (SIS) மேலதிக தகவல்களைப் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும். **தபால் பெட்டி 582, கொழும்பு (தொலைபேசி 0112690150) மற்றும் கட்டிட ஆவணத்தை தலைவர், அமைச்சின் கொள்முதல் குழு, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையகம் வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே** எனும் முகவரியில் **2021.10.18** ஆம் திகதி முதல் **2021.11.08** ஆம் திகதி வரை **0900 மணியிலிருந்து 1500 மணி** வரையான காலப்பகுதியினுள் மனு ஆவணங்களை இலவசமாக பரீசீலனை செய்துக்கொள்ள முடியும்

6. மனுதாரர்கள் **2021.10.18** ஆம் திகதி முதல் **2021.11.2021** ஆம் திகதி **0900 மணியிலிருந்து 1500 மணி** வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை மீள் செலுத்தப்படாத **இருபது ஆயிரம் ரூபா (ரூ.25,000.00)** கட்டணத்தை **பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, தலைமை நிதி அதிகாரியிடம்** சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணம் செலுத்தும் முறை பணமாக செலுத்தப்பட வேண்டும்.

7. மனு ஆவணங்களை பிரதிகளுடன் **2021.11.08 ஆம் திகதி 1500** மணிக்கு கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் அல்லது அதற்கு முன்னர் முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் **2021.11.09 ஆம் திகதி 1100** மணிக்கு மனுதாரர்கள் / பங்கேற்க விரும்பும் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8. மனுக்கோரல் முடிவடைந்த நாளிலிருந்து **தொண்ணூற்றொன்று (91)** நாட்களுக்கு மனுக்கள் செல்லுபடியாகும்.

9. அனைத்து மனுக்களும் மனு பாதுகாப்பு கட்டணமாக LKR 900,000.00 இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

    i. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட

    ii. பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பெயரில்.

    iii. மேலே குறிப்பிட்டுள்ள தொகையில்.

    iv. மனு பாதுகாப்பு நிபந்தனையற்ற, தேவை உத்தரவாதத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும் மற்றும் **2021.11.09** ஆம் திகதியிலிருந்து **2022.03.07** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். (மனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து **120 நாட்களுக்குப்** பின்னர்).

10. மனுக்கள் திறப்பதற்கு குறைந்தது மூன்று (03) நாட்களுக்கு முன்னர் பங்கேற்கும் நபரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் / கடவுச்சீட்டு இலக்கம் என்பன மனுதாரரினால் **தலைமை நிதி அதிகாரி, பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே** எனும் முகவரியில் எழுத்துப்பூர்வமாக தெரியப்படுத்த வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரி

| | | |
|---|---|---|
| **பதவி** | : | **தலைவர், அமைச்சின் கொள்முதல் குழு** |
| **விலாசம்** | : | **பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை** |
| **தொலைபேசி** | : | **0112390719** |
| **தொலைநகல்** | : | **0112390720** |
| **மின்னஞ்சல்** | : | procurement@defence.lk |